**காரைக்குடி நகராட்சி**
**29.05.2020 ம் தேதி நடைபெற்ற சாதரணக் கூட்ட நடவடிக்கைகள்**
**தலைமை: திருகே.ரெங்கராசு, ஆணையர்(பொ) மற்றும் தனிஅலுவலர்(பொ)**
**மன்றப் பொருட்கள்**

<table>
<tr><th>Date of meeting of the council</th><th>SNo.</th><th>Subject in the Agenda</th><th>Decision of the council</th></tr>
<tr><td>29.05.2020</td><td>1</td><td>21. இந்நகராட்சியில் பொது நிதி 2020–2021 திட்டத்தின் கீழ் நகராட்சியில் உள்ள 36 வார்டுகளில் தெரு விளக்குகளை ஒரு ஆண்டு பராமரிப்பு செய்திடும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி, அறிவிப்புகளை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததில் கீழ் கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>விளம்பர விபரம்</th><th>விளம்பரம் செய்த நாளிதழ்/நாள்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>பொது நிதி 2020–21 திட்டத்தின் கீழ் நகராட்சியில் உள்ள 36 வார்டுகளில் தெரு விளக்குகளை ஒரு ஆண்டு பராமரிப்பு செய்திடும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியது.</td><td>Trinity Mirror மற்றும் மக்கள் குரல் 11.03.12020</td><td>69,304/–</td></tr>
</table>
மேற்படி பட்டியலின்படி தொகை ரூ.69,304/–ஐ Graphic Arts Industries-க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண்.21<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>2</td><td>22. இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகன எண்.TN63 AV 5823-க்கு வாகன காப்பீடு 23.05.2020ல் முடிவடைவதால் அதனை புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு தொகை ரூ.15239/–ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அ) அனுமதிக்கலாம்<br>
ஆ) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்</td><td>தீர்மான எண்.22<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| | 3 | **23.** இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகன எண்.TN63 T 3333-க்கு வாகன காப்பீடு **23.05.2020**ல் முடிவடைவதால் அதனை புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு தொகை ரூ.**12089/–**ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>அ) அனுமதிக்கலாம்<br>ஆ) பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண்.23**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 4 | 24. **இந்நகராட்சி வார்டு எண்.**27**ல் உள்ள சௌமியா தொடக்கப்பள்ளி** ARMV **தெரு, காரைக்குடி என்ற பள்ளிக்கு வரிவிதிப்பு எண்.**111/027/00658**ல்** 2017-2018 **இரண்டாம் அரையாண்டு முதல் சொத்து வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. தற்போது செயலர், சௌமியா தொடக்கப்பள்ளி, காரைக்குடி அவர்களின்** 17.03.2020 **தேதிய கடிதத்தில் மேற்கண்ட பள்ளி அரசு உதவி பெறும் பள்ளியாக செயல்பட்டு வருகிறது எனவும், சுயநிதி பாடப்பிரிவு வகுப்புகள் இல்லையெனவும், இதற்கென தனியாக கட்டிடம் ஏதும் இல்லையென உறுதிபட தெரிவித்துள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் சுற்றறிக்கை ந.க.எண்.**7234/14/**ஆர் நாள்** 15.03.2018**ன்படி அரசு உதவிபெறும் பள்ளிகள் தவிர்த்து இதர கல்வி நிறுவனங்களுக்கு வரிவிதிப்பு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்டவாறு வரிவிதிப்பு செய்யப்பட்ட வரிவிதிப்பு எண்.**111/027/00658**க்கு** 2017-2018 **இரண்டாம் அரையாண்டு முதல்** 2020-2021 **இரண்டாம் அரையாண்டு வரையிலான வரித்தொகை ரூ.**26026/-**ஐ வஜா செய்து வரிவிதிப்பு எண்ணை நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**அலுவலகக்குறிப்பு:**<br>**மன்றம் அனுமதிக்கலாம்.**<br>(**ந.க.எண்.**4510/2019/**அ**4) | **தீர்மான எண்.24**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 5 | 25. காரைக்குடி நகராட்சியில் ''சம்பையூற்று'' கரையில் அமைக்கப்பட்டுள்ள **13** ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் நகரில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள **24** ஆழ்குழாய் கிணறுகளின் நீர் ஆதாரத்தைக் கொண்டு நகரில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதன்மூலும் நாள் ஒன்றுக்கு **12.03** MLD குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதன்படி நாள் ஒன்றுக்கு நபர் ருவருக்கு **112** LPCD வீதம் குடிநீர் செய்யப்படுகிறது. இவ்வாறு விநியோகம் செய்யப்படும் குடிநீரில் திரவ குளோரின் (Sodium Hypo Chloride) மூலம் குளோரினேசன் செய்யப்படுகிறது. ஒரு | **தீர்மான எண்.25**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்து** |

| | | | |
|---|---|---|---|
| | | இலட்சம் லிட்டருக்கு 2 ½ லிட்டர் வீதம் திரச குளோரின் சேர்த்து வழங்கும் பட்சத்தில், குடிநீர் விநியோகத்தின் கடைசி பகுதியில் (Tail End) 0.50–1.00 ppm குளோரின் அளவு கிடைக்கும். இவ்வாறு தினசரி விநியோகம் செய்யப்படும் 12.03 MLD குடிநீருக்கு சுமார் 310 லிட்டர் திரவகுளோரின் தேவைப்படுகிறது. அதன்படி 6மாத காலத்திற்கு தேவைப்படும் (ஜீலை – 2020 முதல் டிசம்பர் – 2020 வரை) திரவ குளோரின் வாங்குவதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | |
| | 6 | **26.** காரைக்குடி நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டப்பணி தரமற்ற நிலையில் நடைபெறுகிறது என தெரிவித்து திரு.ஜிடி.மணிகண்டன் என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண்.WP(MD) No.18932/2019 தொடர்பாக நகராட்சி சார்பாக திரு.பி.மகேந்திரன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜரானதற்கும் மற்றும் அதற்கான வழக்கு கட்டணம் ரூ.7,500/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.26**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 7 | **27.** இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய வடபுறம் பொதுமக்கள் வந்து செல்லும் வண்ணம் அங்குள்ள காம்பவுண்டு சுவரில் பாதை அமைப்பது தொடர்பாக திரு.SPD.கருப்பையா என்பவர் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு எண்.WP(MD)/1461/2020ல் நகராட்சி சார்பாக திரு.பி.மகேந்திரன் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகவும் அதற்கான வழக்கு கட்டணம் ரூ.7500/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.27**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 8 | **28.** இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் இயங்கிவரும் பொறியியல் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் கோப்புகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கு தேவையான கப்போர்டுகள் அமைத்தல் மற்றும் அலுவலர்களுக்கான தடுப்புகள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.28**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>9</td>
<td>
29. காரைக்குடி நகராட்சி சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஒரு சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் பரப்பளவு 13.75 ச.கி.மீ. ஆகும். 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 106714 ஆகும். இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் நகரில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளின் நீர் ஆதாரத்தைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகரின் முக்கிய குடிநீர் ஆதாரம் சம்பையூற்று என்ற இயற்கை நீருற்று ஆகும். இங்கு 13 ஆழ்குழாய் கிணறுகளும் தலைமை நீரேற்று நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஓ.சிறுவயல் பகுதியில் இரண்டு ஆழ்குழாய் கிணறுகளுடன் கூடிய நீரேற்று நிலையம், மற்றும் நகரில் 16 இடஙகளில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட தலைமை நீரளிப்பு நிலையம் மற்றும் நீரேற்று நிலையஙகளிலிருந்து பெறப்படும் குடிநீர் நகரில் கீழ்கண்ட இடஙகளில் அமைக்கப்பட்டுள்ள 10 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் ஏற்றப்பட்டு தினசரி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.
<table>
<tr><td>1</td><td>திருச்சி சாலை</td><td>2.50 இலட்சம் லிட்டர் OHT</td></tr>
<tr><td>2</td><td>சாத்தப்பா பூஙகா</td><td>15.00 இலட்சம் லிட்டர் OHT</td></tr>
<tr><td>3</td><td>சாத்தப்பா பூஙகா</td><td>3.00 இலட்சம் லிட்டர் OHT</td></tr>
<tr><td>4</td><td>மகர்நோன்பு திடல்</td><td>15.00 இலட்சம் லிட்டர் OHT</td></tr>
<tr><td>5</td><td>மர்நோன்பு திடல்</td><td>3.00 இலட்சம் லிட்டர் OHT</td></tr>
<tr><td>6</td><td>சுப்பிரமணியபுரம்</td><td>4.00 இலட்சம் லிட்டர் OHT</td></tr>
<tr><td>7</td><td>சூடாமணிபுரம்</td><td>8.00 இலட்சம் லிட்டர் OHT</td></tr>
<tr><td>8</td><td>செஞ்சை</td><td>6.00 இலட்சம் லிட்டர் OHT</td></tr>
<tr><td>9</td><td>கல்லுக்கட்டி</td><td>1.65 இலட்சம் லிட்டர் OHT</td></tr>
<tr><td>10</td><td>கழனிவாசல்</td><td>3.00 இலட்சம் லிட்டர் OHT</td></tr>
</table>
மேற்கண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றம் செய்திட 22.101 கி.மீ. நீளத்திற்கு பம்பிங மெயின் குழாய்களும், பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட 186.733 கி.மீ. நீளத்திற்கு பகிர்மானக் குழாய்களும் மற்றும் குடிநீர் விநியோகத்திற்கு ஏற்றவாறு அடைத்து, திறப்பதற்கு 38 வால்வுகள் அமைக்கப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ள தலைமை நீரளிப்பு நிலையம் உள்ளிட்ட அனைத்து கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல், இயக்குதல் மற்றும் முறையான குடிநீர் விநியோகம் செய்தல் போன்ற குடிநீர் விநியோகம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளை செய்திட தேவையான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர் அவர்களின் அனுமதி பெற்று கடந்த 2015ம் ஆண்டிலிருந்து தனியார் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து, இப்பணியினை கடந்த ஒராண்டிற்கு மேற்கொள்ள தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களால் 13.06.2019ல் அனுமதி வழஙகி உத்தரவிடப்பட்டது. (ந.க.எண்.23651/2013/DO1, நாள்.13.06.2019) அதன்படி,
</td>
<td>தீர்மான எண்.29<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஓராண்டிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் அனுமதிக்கப்பட்ட காலம் வருகிற 31.07.2020ல் முடிவடைவதால் மீண்டும் தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற்றிட வேண்டியுள்ளது. எனவே, மேற்கண்ட குடிநீர் விநியோக பராமரிப்பு பணியினை தொடர்ந்து தனியார் மூலம் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள ஓராண்டிற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 105.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>குடிநீர் நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம். | |
| | 10 | 30. இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் வடபுறம் புதிதாக கட்டப்பட்டுள்ள நகர் நலப் பிரிவுக்கான புதிய கட்டிடத்தில் ஆர்.சி.சி.மேற்கூரை அமைத்தல் பணி வரை செய்து முடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் மீதமுள்ள பணிகளான பூச்சு வேலைகள், தளம் அமைத்தல், கதவு, ஜன்னல்கள் அமைத்தல், வர்ணம் பூசுதல் உள்ளிட்ட இதர பணிகளை செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு 9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.30<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| | 11 | 31. காரைக்குடி நகராட்சி வார்டு எண்.21ல் உள்ள AR.A.தெரு வழியாக பேருந்து உள்ளிட்ட கனரக வாகனங்கள் அதிகம் சென்று வருகின்றன. இந்த சாலையின் நடுவில் தற்போது பாதாள சாக்கடை திட்டப் பணியின் கீழ் குழாய் பதித்தல் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி சாலையில் கடந்த 50 வருடங்களுக்கு முன்னர்அமைக்கப்பட்ட 80mm dia cast iron குடிநீர் பகிர்மானக் குழாய் ஆங்காங்கே சேதமடைந்து உள்ளதாலும், குழாய் முழுவதும் மண் படிந்து குழாயின் விட்டம் சுருங்கிவிட்டதாலும், மேற்படி சாலையில் உள்ள வீடுகளுக்கு உள்ள இணைப்புகளில் போதுமான குடிநீர் கிடைக்கப் பெறவில்லை. தற்போது பாதாள சாக்கடைப் பணிக்காக சாலை மூடப்பட்டு உள்ள நிலையில், மேற்படி சேதமடைந்துள்ள குடிநீர் பகிர்மானக் குழாயினை மாற்றி அமைத்தால் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்குதல் தொடர்பான நீண்ட நாள் பிரச்சினைக்கு முடிவு ஏற்பட்டுவிடும். அதன்பேரில், மேற்படி சாலையில் புதிதாக 450 மீட்டர் நீளத்திற்கு 100mm dia D.1. பகிர்மானக் குழாய் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | தீர்மான எண்.31<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| | 12 | 32. காரைக்குடி நகராட்சி புதிய பேருந்துநிலையத்திற்கு வந்து செல்லும் பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக வைக்கப்பட்டிருந்த குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதடைந்து விட்டதால், PVC குடிநீர் தொட்டி வைக்கப்பட்டு அதில் | தீர்மான எண்.32<br>அலுவலக குறிப்பு |

| | | | |
|---|---|---|---|
| | | லாரி மூலம் குடிநீர் நிரப்பப்பட்டு வினியோகம் செய்யப்பட்ட வந்த நிலையில் மேற்படி தொட்டி அவ்வப்போது சமூக விரோதிகளால் சேதப்படுத்தப்படுகிறது. எனவே, பேருந்து நிலைய வளாகத்தில் நிரந்தரமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கிடும் வகையில் புதிதாக ஒரு குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் (RO PLANT) வைப்பதற்கும் மற்றும் பாதுகாப்பினைக் கருதி இரும்பு கிரில் தடுப்பு அமைப்பதற்கும் ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| | 13 | 33. இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி பணியினை செய்து முடித்த வகையில் பிடித்தம் செய்யப்பட்ட 1% முன் வைப்புதொகை திரும்ப வழங்கக்கோரி திரு.எம்.முகம்மது அப்துல்லா, ஒப்பந்ததாரர் விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பெறப்பட்ட டெபாசிட் தொகைகள் காலங்கடந்த வைப்புதொகை பதிவேட்டில் பதிவுகள் உள்ளது. எனவே, காலங்கடந்த வைப்பு தொகையிலிருந்து தொகை ரூ.79,500/–யை திரு.எம்.முகம்மது அப்துல்லா ஒப்பந்ததாரருக்கு கீழ்கண்ட விபரப்படி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்.33<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| வ.எண். | ஒப்பபந்த பணிகள் விபரம் | அளவு புத்தகங்கள் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடு–I | வழங்கும் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நல்லையன் தெருவில் பேவர்தளம் அமைத்தல் | 66/2013–14 | 14 | 21000 |
| 2 | கழனிவாசல் புதுரோடு தார்ச்சாலை அமைத்தல் | 101/2015–16 | 44 | 9500 |
| 3 | செஞ்சை மயான திடலில் சுற்றுச்சுவர் அமைத்தல் | 14/2014–15 | 44 | 10000 |
| 4 | சந்தைப்பேட்டை இடுகாடு சுற்றுச்சுவர் அமைத்தல் | 11/2014–15 | 30 | 4500 |
| 5 | தெற்கு தெரு பள்ளி, கழிப்பிடம் அமைத்தல் | 99/2008–09 | 30 | 4100 |
| 6 | வ.உ.சி.பள்ளியில் செப்டிக்டேங்க் அமைத்தல் | 132/2013–14 | 30 | 7000 |
| 7 | PRNC பள்ளியில் சத்துணவு | 16/2011–12 | 30 | 5000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | மையம் அமைத்தல் | | | |
| 8 | வார்டு–24 தெற்கு ரதவீதியில் தார்தளம் அமைத்தல் | 136/2013–14 | 43 | 9500 |
| 9 | அருணாநகர் பூங்கா மேம்பாட்டு பணி | 50/2014–15<br>59/2014–15 | 42 | 9000 |
| | | | **மொத்தம்** | **79500** |

**<u>அலுவலகக்குறிப்பு–</u>**

காலம் கடந்த வைப்புதொகை பதிவேட்டிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.5764/2018/பி2)

ஆணையர்(பொ)
காரைக்குடி நகராட்சி